**கவனிக்க.**- 2007.05.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1498 - 2007 මැයි 18 වැනි සිකුරාදා - 2007.05.18

1498 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 377 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 376 | நானாவித அறிவித்தல்கள் | - |


கவனிக்க.- (i) காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் 2007, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தம்) சட்டமூலம் 2007, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) தொழில் உத்தியோகத்தர்களின் சங்க நலன்புரி நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மே 25 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மே 4 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆயவிற்பனையும் குத்தகையும்

## ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2007/2008

*(2007.07.01 முதல் 2008.06.30 ஆந் திகதி வரை)*

*2007 ஆம் வருடம் யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2008 ஆம் வருடம் யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:-*

*(அ) தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களினதும் பொது நிபந்தனைக்கு அமைவாகவும்,*

*(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத் தவறணையை குத்தகையிடும் நிபந்தனைகளுக்கமைவாகவும்,*

*2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு அமைய ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணபத் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படுதல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக உறையில் இடப்பட்டு, மெழுகிடப்பட்டு, அதன் இடது பக்கத்தில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் "................................. இலக்கமுள்ள ................................. கள்ளுத்தவறணைக்குரிய கேள்வி-2007/2008" எனக் குறிக்கப்பட வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2007.05.30 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதையிடுதல் அல்லது பதிவுத்தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகையிடும் நிபந்தனைகளுக்கமைய இடல் வேண்டும்.*

*5. 2007, மே 30 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச்செயலாளர் அலுலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும். குறித்த திகதியில் விற்கப்படாத தவறணைகள் 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி முற்பகல் 10.00 மணியளவில் மறுவிற்பனைக்காக விடப்படும். அன்றைய தினம் ஏல முன் வைப்பு குறித்த வர்த்தமானியின் பிரமாணங்களுக்கு அமைவாகும்.*

*6. இது தொடர்பான மேலதிக விபரங்களை ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*டி. சூரசிங்க,*
*பிரதேச செயலாளர்,*
*ஆராச்சிக்கட்டுவ.*

*எனது இல. 8/1/4/7/5/ර්ා.කු.*
*பிரதேச செயலகம்,*
*ஆராச்சிக்கட்டுவ,*
*2007.04.27.*

**அட்டவணை**

| பிரதேசம் | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் விற்கும் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| ஆனைவிழுந்தான் பற்று | கருக்குப்பனை | 10 | 2007, மே மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 250 |
| ஆனைவிழுந்தான் பற்று | ஆராச்சிக்கட்டுவ | 11 | 2007, மே மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 250 |
| ஆனைவிழுந்தான் பற்று | பத்துலுஓய | 12 | 2007, மே மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 250 |

5-273

# ஏல விற்பனைகள்

## DFCC வங்கி

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை**

***31.05.2006 ஆந் திகதியிடப்பட்ட 1775 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் விபரம்.- அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் பி. சின்னத்தம்பி அவர்களால் வரையப்பட்ட 09. 02. 1999 திகதியிடப்பட்ட 6849 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பள்ளேபத்துவில் கொழும்பு மாநகர நிர்வாக எல்லைக்கு உட்பட்ட கொச்சிக்கடை வடக்கு 9 ஆம் வட்டாரத்தில் உள்ள செட்டியார் தெரு 185 மற்றும் 187 வரிமதிப்பீட்டு இலக்கங்களையும், செட்டியார் தெரு மற்றும் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கடற்கரை வீதி 74 வரி மதிப்பீட்டு இலக்கத்தையும் கொண்ட காணிகளும் கட்டிடங்களும் காணி, வளவுகள் மற்றும் கட்டிடம் உள்ளடங்கலாக .***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0பே. 11.50பே)***

*1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசில் சரிவர சட்டப்படி கூட்டிணைக்கப்பட்டதும், கொழும்பு 11 கடற்கரை வீதி, இல. 104 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான தனா மான் பவர் (பிரைவேட் லிமிடெட்) கம்பனியினால் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு S. M. குணரத்ன என்பவரால் 31. 05. 2006 திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1775 பிணை உறுதி மூலம் DFCC வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீளளிக்கப்படாத சொத்து.*

DFCC வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 07 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலம் முடிவில் பின்வரும் கட்டணங்களை காசாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்முதல் விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரச் சபைக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சத வீதம்) ;
(4) விளம்பரச் செலவான ரூ. 25,000/- வை மொத்தமாக ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ.500/-
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீது 90% கட்டணத்தை விற்பனையிலிருந்து 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள் , தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011 - 2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டம் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்கிரம,
ஐஎஸ்ஓ 9001: 2000 இலக்க தராதரமுடைய
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணி செயல் முகவர்.

| | |
|---|---|
| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சி அறையும் :* |
| 24, டொறிங்ரன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி இல.: 081-2227593 | தொலைபேசி இல.: 011-2585408 011-2502680 |
| தொலைநகல் இல.: 081-2224371 | தொலைநகல் இல.: 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.com | மின்-அஞ்சல் : schokman@samera@1892.com. |

5-275

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி லிமிடெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

*க/கு இல. 0010 5002 3350-ஜீ. எச். சோமசிறி*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையால் 23/06/2004 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டதும் 16/07/2004 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 02/07/2004 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய தினசரிச் செய்தித் தாள்களிலும் வெளியிடப்பட்டதுமான தீர்மானத்தைப் பின்பற்றி, அறுபத்து ஐந்து இலட்சத்து எழுபத்தோராயிரத்து முந்நூற்றித் தொண்ணூற்றி மூன்று ரூபா இருபத்தேழு சதத்தையும் (ரூபா 6,571,393.27) முப்பத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபா மீது (ரூபா 32,44,000) 2004 மார்ச் 04 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு பன்னிரண்டு தசம் ஒன்பது தசவீதப்படி (12.9%) வட்டியையும் பதினைந்து இலட்சம் ரூபாமீது (ரூபா 15,00,000) ஆண்டொன்றுக்கு பதினாலு சதவீதப்படி (14%) மேலும் வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவீடுவதற்காக இதற்காக அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் ஆதனத்தை அதே இடத்தில் 07.06.2007 ஆந் திகதி மு. ப. 10.30, பி. ப. 3.00,*

பி. ப. 3.30 மணிக்கு கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர்கள் திருவாளர்கள் டன்ஸ்டன் அன்ட் டலஸ் கெலார்ட் என்பவர்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வர் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*அட்டவணை*

முதலாவதாக :

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மொறவக்க கோறளை, ரொட்டும்பா கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ளதும் 'முத்தெட்டு முலஹேன' என அழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. பீ. விமலசேன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, பெப்புருவரி 07 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2220ஏ (பழைய வரைபடம் எவ்வீபீ 44) இல் குறிப்பிடப்பட்டு துண்டு 869 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 869 இன் எல்லைகளாவன – வடக்கு : இதே காணியின் துண்டு 888 ; கிழக்கு : இதே காணியின் துண்டு 868; தெற்கு : இதே காணியின் துண்டு 885 மேற்கு : இதே காணியின் துண்டு 870. இது இரண்டு ஏக்கர், பத்து பேர்ச்சுகள் (02ஏ – 0றூ. 10பே) விஸ்தீரணமுடையது. மொறவக்க காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜீ 80/27 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மொறவக்க கோறளை, ரொட்டும்பா கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ளதும் 'முத்தெட்டு முலஹேன' என அழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. பீ. விமலசேன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, பெப்புருவரி 08 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2220பீ இல் குறிப்பிடப்பட்டு துண்டு 843 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள் , கட்டிடங்கள் மற்றும் எல்லா வற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 843 இன் எல்லைகளாவன – வடக்கு : இதே காணியின் துண்டு 845 : கிழக்கு: இதே காணியின் துண்டு 842 ; தெற்கு : இதே காணியின் துண்டுகள் 853 மற்றும் 852 ; மேற்கு : இதே காணியின் துண்டு 844. இது முப்பத்தொன்பது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 39பே) விஸ்தீரண முடையது. மொறவக்க காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜீ 80 / 28 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவதாக :

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை நான்கு கிறவட்சுக்களுக்குள் ஹிட்டடியவில் அமைந்துள்ளதும் ஹுனுஎலவிலாவின் துண்டு 'ஏ' என அழைக்கப்படும் காணியின் துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப் பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன – வடக்கு : இதே காணியின் பாகம் ; கிழக்கு : வீதி, தெற்கு : இதே காணியின் துண்டு 2 ; மேற்கு : இதே காணியின் பாகம். உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. எஸ் . ஜயவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, மார்ச்சு 18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5627 இல் குறிப்பிட்டுள்ளது. இது இருபத்திரண்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 22.5பே) விஸ்தீரணமுடையது. மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி / பக்கம் ஏ 406/247 இல் பதிவு செய்யப் பட்டுள்ளது. சொல்லப்பட்ட வரைபடம் இல. 5627 இல் காட்டப்பட்டுள்ள கிழக்கு எல்லையாக அமைந்துள்ள வீதி வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து –

மேற்கூறப்பட்ட ஹிட்டட்டியவில் அமைந்துள்ளதும் 'ஹுனுஎலவிலா வின் துண்டு ஏ' என அழைக்கப்படும் காணியின் துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. எஸ். ஜயவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, மார்ச்சு 18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5627 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட துண்டு 2 இல் எல்லைகளாவன – வடக்கு : இதே காணியின் துண்டு 1 ; கிழக்கு : வீதி : தெற்கு : இதே காணியின் துண்டுகள் 3, 4, 5, மேற்கு : இதே காணியின் பாகம். இது இருபத்து மூன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 23.5பே) விஸ்தீரணமுடையது. மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 406/248 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட வரைபடம் இல. 5627 இல் காட்டப்பட்டுள்ள கிழக்கு எல்லையில் அமைந்துள்ள வீதி வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து

***மூன்றாவதாக :***

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை நான்கு கிறவட்சுக்களுக்குள் தெல்கந்த வீதி, (வரிமதிப்பு இல. 2482 ஐக் கொண்ட )யில் அமைந்துள்ளதும் 'அலவிட்ட கார்டின்ஸ் என தற்போது அறியப்படுகின்ற ஓவிட்ட, அர்மகே வத்தை, வத்தை கெபெல்லகஹவத்தை என்ற ஈரியகஹவல பிட்டனிய மற்றும் கந்தவெல' என அழைக்கப்படும் தொடர் காணிகளின் துண்டு ஏ யின் நிர்ணயிக்கப் பட்ட துண்டு 13 இன் மண் மற்றும் பயிர்ச்செய்கைகள் முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாக் கட்டிடங்களுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 13 இன் எல்லைகளாவன – வடக்கு : துண்டு 18 (15 அடி வீதி) ; கிழக்கு : இதே காணியின் துண்டு இல. 12; தெற்கு: காலி வலவ்வே, பெபிலிய, பிட்டனிய, மேற்கு : மஹபத்தே கொறட்டுவ, இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் எவ். விஜேவீர அவர்களால் தயாரிக்கப்பட்டு 1969, மார்ச்சு 22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1115 இற்கமைய இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே) விஸ்தீரணமுடையது. மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 421/214 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

துண்டு 13 என அடையாளமிடப்பட்ட மேற்கூறப்பட்ட காணியானது, உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். எல். எம் .ரிஸ் மி அவர்களால் தயாரிக்கப்பட்டு 2000, ஏப்பிறல் 18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1053 இல் குறிப்பிட்டு துண்டு 13 என தற்போது அடையாளமிடப் பட்டதாகவும் மீள் நில அளவையாகவும் இருக்கின்றது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்

5-287

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்
## (கொக்கல கிளை)

### ஆதனங்களின் பகிரங்க ஏல விற்பனை

*(கடன் எடுத்த/காணியை ஈடு வைத்தது கல்பொக்க ஏலகே பேர்ட்டி மற்றும் வன்னி ஆராச்சிகே ரம்யா பிரியந்தி பொன்சேகா அல்லது வன்னி ஆரச்சிகே ரம்யா பிரியன்தி பொன்சேகா மேற்படி கூரிய காணியை கமர்ஷல் பாங்கில் ஈடு வைத்துள்ளனர்.)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் இதன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் 2007 யூன் 12 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு பகிரங்க ஏல மூலம் விற்பனை செய்யப்படும்.

### பகிரங்க ஏல விற்பனை

ஆதனத்தின் விவரணம்.- "தென் மாகாணம், காலி மாவட்டம் தல்பேபத்து கத்தலுவா கிராமத்தில் அமைந்துள்ள தண்காஓவிட்ட அல்லது மிரியாண தன்கள்ஓவிட்ட என்ற காணிகள் நில அளவையாளர் என். எஸ். கலபத்தியின் 31. 5. 1993 திகதியுடைய வரைபடம் இலக்கம் 4266A காண்பிக்கப்பட்ட மேற்கூறிய லொட்ஸ் 1 மற்றும் 2 என்ற காணிகளில் லொட் A இன் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1ரூ. 10பே) அல்லது (0.1265) மற்றும் இக் காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து.

தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.- தயவு செய்து 17. 12. 2004 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும் 24. 02. 2006 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த அயிலன்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் விற்பனை விளம்பரத்துக்காக 18. 05. 2007 திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 18. 05. 2007 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த அயிலன்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம்.**- காணிக்கு நேராக அகங்கம - கட்டலுவ- திட்டகல பாதையால் செல்லமுடியும். மற்றும் இக் காணி புகையிரத கடவை தாண்டி 50 மீட்டர் சென்ற பிறகு வலது பக்கம் அமைந்துள்ளது. காலி மாத்தறை பாதையில் இருந்து 150 மீட்டர் தூரம்.

**கட்டணம் செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏலத்தின் முடிவில் பின்வரும் தொகைகளை பணமாக செலுத்த வேண்டும்;-

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மறைக்கட்டணம் 01%
(3) ஏலதாரரின் தரகு 2 1/2% ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2000 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மிகுதி 90% கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட் பிரதான காரியாலயத்தில் அல்லது கொக்கல கிளையில் செலுத்த வேண்டும்.

உறுதி மற்றும் தொடர்பு சாதனங்களை பற்றிய விபரங்களுக்காக பின்வரும் இடத்தில் பெற்று கொள்ள முடியும் :-

முகாமையாளர்,
கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட்,
11/8, ஏற்றுமதி ஊக்குவிப்பு கல்யம்,
காலி வீதி,
கொக்கல.

தொலைபேசி 091 - 2283485
091 - 2282339
091 - 2283388

பக்ஸ் இல. 091 - 2282444

எல். பி. சேனநாயக்க (ஜே. பி,)
உத்தரவு பெற்ற மூத்த ஏலதாரர்
கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்ற மற்றும்
கொழும்பு மாவட்ட நீதிமன்ற
ஆணையாளர், விலைமதிப்பிடுபவர்
அரசாங்க மற்றும் வர்த்தக
வங்கிகளின் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலை/பக்ஸ் இல. 2445393

5-281

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.